செய்தி வெளியீடு எண்: 239/2018 நாள்: 21.04.2018

**பாலாறு விவசாய கல்லூரியில் நடைப்பெற்ற பூகம்ப மீட்பு ஒத்திகை செயல்விளக்க நிகழ்ச்சியில் மாண்புமிகு வணிகவரி மற்றும் பத்திரப்பதிவுத் துறை அமைச்சர் திரு.கே.சி.வீரமணி அவர்கள் சிறப்பு விருந்தினராக கலந்துக்கொண்டு பார்வையிட்டார்**

வேலூர் மாவட்டம் பேர்ணாம்பட் வட்டம் கொத்தாரிகுப்பம் கிராமம் பாலாறு விவசாய கல்லூரியில் தேசிய பேரிடர் மீட்பு படை மற்றும் மாவட்ட நிர்வாகம் இணைந்து பொதுமக்கள் மற்றும் மாணவ மாணவிகளுக்கு நடத்திய பூகம்ப மீட்பு ஒத்திகை செயல்விளக்க நிகழ்ச்சியில் மாண்புமிகு வணிகவரி மற்றும் பத்திரப்பதிவுத் துறை அமைச்சர் திரு.கே.சி.வீரமணி அவர்கள் சிறப்பு விருந்தினராக கலந்துக்கொண்டு ஒத்திகையை பார்வையிட்டார்.

இந்நிகழ்ச்சிக்கு மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.சி.அ.ராமன், இ.ஆ.ப., அவர்கள் தலைமை தாங்கினார்.

இக்கூட்டத்தில் மாண்புமிகு வணிகவரி மற்றும் பத்திரப்பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் பேசியதாவது:-

வேலூர் மாவட்டம் நிலநடுக்கம் ஏற்படும் 6.9 ரிக்டர் அளவு பதிவாகக்கூடிய மண்டலம் 3 பகுதிகளில் உள்ளதாக இந்திய புவியியல் ஆராய்ச்சி மையத்தால் அறிவிக்கப்பட்ட பகுதியாக உள்ளது. இயற்கை பேரிடர் காலத்தில் மக்கள் தங்களை தாமே பாதுகாத்து கொள்ள இது போன்ற செயல்முறை விளக்கங்கள் அரக்கோணம் தேசிய பேரிடர் மீட்பு படையினர் போலி ஒத்திகையின் மூலம் பொதுமக்களுக்கு செய்து காண்பித்து வருகின்றனர். தேசிய பேரிடர் மீட்பு படையினர் இந்திய அளவிலும் நமது மாநிலத்தில் ஏற்படும் பேரிடர் காலங்களில் சிறப்பாக செயல்பட்டு மக்களை மீட்கும் பணியினை செய்து வருகிறது. இன்றைய காலகட்டத்தில் குறிப்பாக இளைஞர்களுக்கு இந்த செயல்முறை விளக்கங்கள் தேவையான ஒன்று. ஏனெனில் இளைஞர்கள் பேரிடர் காலங்களில் யாரையும் எதிர்பாராமல் தன்னார்வத்தோடு பொதுமக்களை இடர்பாடுகளிலிருந்து காப்பாற்றி பாதுகாப்பான இடத்திற்கு செல்ல பெரிதாக உதவுகின்றனர். எனினும் வேலூர் மாவட்டத்தில் நிலநடுக்கம் ஏற்படும் போது இங்குள்ள மாவட்ட நிர்வாகம், அனைத்துத் துறை அரசு அலுவலர்கள் மற்றும் பொதுமக்களுக்கு போதிய விழிப்புணர்வு ஏற்படுத்தும் விதமாக இங்கு பூகம்பம் ஏற்படும் காலத்தில் கட்டிடங்களுக்குக்கிடையே சிக்கிக்கொள்ளும் பொதுமக்களை மீட்க செயல்விளக்கம் செய்து காண்பிக்கப்படுகிறது. விபத்து நேரங்களில் முதலில் பூகம்ப அவசர உதவி தொலைபேசி எண் 1077ஐ தொடர்பு கொண்டு தகவல்களை தெரிவிக்க வேண்டும். பின்னர் அடுத்த கட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். செயல்விளக்க நேரத்திற்கும் நேரடி விபத்து நேரத்திற்கும் மக்களை காப்பாற்றுவது சிறிய வேறுபாடுகள் இருக்கும். பெருவெள்ளம், நிலநடுக்கம், புயல், தீ விபத்துக்கள், சுனாமி போன்ற பேரிடர் ஏற்படும் காலங்களில் அரசுடன் இணைந்து எவ்வாறு நமது சுற்றுப்புரத்தில் உள்ள மக்களை காப்பாற்ற இந்த செயல்விளக்க பயிற்சியை அனைவரும் தெரிந்து கொள்ள வேண்டும் என்று மாண்புமிகு வணிகவரி மற்றும் பத்திரப்பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் பேசினார்.

இதனை தொடர்ந்து அரக்கோணம் தேசிய பேரிடர் மீட்பு படையினரின் செயல்முறை விளக்கம் நடைப்பெற்றது. இந்த பூகம்ப ஒத்திகையின் போது 6.9ரிக்டர் அளவில் பூகம்பம் ஏற்படும் போது உருவாகக்கூடிய செயற்கை சப்தத்தை ஏற்படுத்தி அபாய சங்கை ஒலிக்க வைத்து பொதுமக்களுக்கும்

மாணவர்களுக்கும் பூகம்ப எச்சரிக்கை விடுக்கப்பட்டது. பின்னர் விபத்து குறித்து தீயணைப்பு மற்றும் மாவட்ட பேரிடர் மீட்பு கட்டுப்பாட்டு பிரிவுக்கு தகவல் அளிக்கப்படுகிறது. மாவட்ட நிர்வாகத்தால் தேசிய மீட்பு படையினருக்கு தகவல் அளிக்கப்பட்டு உடனடியாக மீட்பு படையினர் சம்பவ இடத்திற்கு விரைகின்றனர். மீட்பு படையினர் பூகம்பத்தால் பாதிக்கப்பட்ட பகுதியை தங்கள் கட்டுப்பாட்டில் கொண்டு வந்து முதலுதவி சிகிச்சை அளிக்க மருத்துவ பகுதி ஒன்றியையும் தகவல்களை பறிமாரி கொள்ள தற்காலிக தகவல் மையத்தையும் ஏற்படுத்திக்கொண்டு கட்டிட இடிபாடுகளுக்குள் சிக்கி உள்ளோர்களின் இருதய துடிப்பை வைத்து அவர்கள் எந்த திசையில் உள்ளார்கள் என்ற கருவியுடன் தகவல்களை பெற்று கட்டிடம் மற்றும் ஜன்னல்கள் போன்றவற்றை நவீன கருவிகளின் உதவியுடன் உடைத்து இடிபாடுகளில் சிக்கியுள்ளவர்களை பத்திரமாக மீட்டு கொண்டு வந்து லேசான காயம் அடைந்தவர்களுக்கு முதலுதவிகளையும் அதிகமாக காயம் அடைந்தவர்களை அருகில் உள்ள மருத்துவமனைகளுக்கு அனுப்பி வைப்பதை போலி ஒத்திகை மூலம் தேசிய பேரிடர் மீட்பு படையினர் மற்றும் தீயணைப்பு குழுவினர் பொதுமக்கள், மாணவர்கள் மற்றும் அரசு அலுவலர்களுக்கு செய்து காண்பித்தனர். இந்த நிகழ்விற்கு முன்னதாக தேசிய பேரிடர் மீட்பு படையினர் அனைத்து விதமான மீட்பு காலங்களில் பயன்படுத்தும் நவீன மீட்பு கருவிகளை பொதுமக்கள் மற்றும் மாணவர்கள் அறிந்துக்கொள்ளும் விதமாக கண்காட்சியினை ஏற்பாடு செய்தனர்.

இந்த நிகழ்ச்சியில் மாவட்ட வருவாய் அலுவலர் மரு.தா.செங்கோட்டையன், வேலூர் தொழில்நுட்ப பல்கலைகழக பேரிடர் மேலாண்மை துறை இயக்குநர் திரு.கணபதி, ஆவின் பெருந்தலைவர் திரு.த.வேலழகன், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) திரு.சண்முகநாதன், (நிலம்)வளர்மதி, துணை ஆட்சியர்கள் திருமதி.பேபிஇந்திரா, திரு.ஜெயக்குமார், பேரிடர் மேலாண்மை வட்டாட்சியர் திருமதி.பூமா, பேர்ணாம்பட் வட்டாட்சியர் திரு.மகாலிங்கம் மற்றும் அரக்கோணம் தேசிய பேரிடர் மீட்பு படை குழுவினர் மற்றும் மாணவ மாணவிகள் பொதுமக்கள் கலந்துக்கொண்டனர்.

வெளியீடு:
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் வேலூர்.